1982 மார்ச் 22]

முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசாக இருக்கிறது. கோதுமை பற்றாக்குறை இருக்கிறது. கோதுமை தேவையைப் பூர்த்திச் செய்ய முடியாமல் இருப்பதால்தான் அந்நிய நாட்டில் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை வந்தது என்று மத்திய உணவு அமைச்சர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது நமக்கு 60,000 டன் அரவைக்குத் தரவேண்டும். பற்றாக்குறை இருப்பதன்காரணமாக, 30,000 டன்தான் கொடுத்து இருக்கிறார்கள். பற்றாக்குறை இருப்பதன்காரணமாகத்தான் அதிக விலை கொடுத்து கோதுமை இறக்குமதி செய்வதாகச் சொல்லப்படுகிறது.

நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 586—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் நெல் அரவைத் திறன் கொண்ட பெரிய (gian) நவீன அரிசி அரவை ஆலை ஒன்று ஏற்படுத்துவதுபற்றி தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆராய்ந்து வருகிறது.

[முற்பகல் 9.10]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்த நவீன அரிசி ஆலைகளானது எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லை, தனியார்களுடைய அரவை ஆலைகளுக்கு அரைப்பதற்காக கொடுக்கும்போது, அவர்கள் அதிகமாக அவுட்டேர்ன் வரவேண்டும் என்பதற்காக, நாற்றம் பிடித்த தண்ணீரில் டபிள் ஊரல் போடுவதன் காரணமாக, அதை உண்ணக்கூடிய மக்களுக்கு வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு போன்ற சில டிரபிள்கள் வருவதை அரசு அறியுமா ? அதைப் போக்க தமிழகத்தின் பல இடங்களில் அரிசி அரவை ஆலைகளை நிறுவ அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 13 அரிசி அரவை ஆலைகள் இருக்கின்றன. திருவாரூர், அம்மாப்

பேட்டை, சுந்தரக்கோட்டை, திருநாகேஸ்வரம், மாயூரம், பட்டுக்கோட்டை, செய்யாறு, கள்ளக்குறிச்சி, அடவத்தூர், பொள்ளாச்சி, கடச்சநேந்தல், தாழையூத்து, திம்மாவரம் ஆகிய இவற்றின் அனைத்தினுடைய அரவைத் திறன் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 600 மெட்ரிக் டன்கள் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, பச்சையரிசி அரவை 30 ஆயிரம் டன்கள் அளிப்பதற்கென ஏழு அரவை ஆலைகளில் கூடுதல் அரவை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனையும் சேர்த்து 1 இலட்சத்து 50 ஆயிரம் டன்கள் அளவுக்குத்தான் அரவைத்திறன் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கும் மேலாக 3 இலட்சத்திலிருந்து 4 இலட்சம் டன் அளவுக்கு நாம் தனியாக அரவை ஆலைகளுக்குத் தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோதுதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல சில பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் அரைத்துத் தருவதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. நாம் முகவர்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் நம்முடைய நோக்கம் நிறைவேற முடியாத அளவுக்கு சில பல சங்கடங்களை ஏற்படுத்துகிறார்கள்.

ஆகவேதான் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு பெரிய நவீன ஆலையை ஏற்படுத்தி 100 டன்கள் அரைக்கிற அளவுக்கு அது வருமேயானால் நல்லதென இந்த அரவைத் திறனை உயர்த்துவதற்கு முயன்று வருகிறோம். நாமே நமக்கு வேண்டிய அரவையை செய்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் தொடங்க வேண்டும் என்ற நிலையை அரசுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகம் அறிவித்திருக்கிறது. அரசு அதைப்பற்றி ஆராய்ந்து வருகிறது. அந்த ஆலையை எந்த இடத்திலே வைக்கலாம் என்பது பற்றிய சில பல முறைகளை தந்திருக்கிறார்கள். அந்த இடங்களில் தண்ணீர் கிடைக்க வேண்டும், மின்சாரம் கிடைக்க வேண்டும், தொழிலாளர்கள் கிடைக்க வேண்டும், போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். நெல் அதன் சுற்றுப் புறத்திலே கிடைக்கிற அளவுக்கு இருக்க வேண்டும். இந்தத் தன்மைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் நாம் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதற்கென ஒரு இடத்தை தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் குறித்துக் கொடுத்திருப்பதில் ,தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி, தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை, திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், என்று தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளில் நான் ஏற்கெனவே, சொன்னது போல தண்ணீர், மின்சாரம் தொழிலாளர்கள், போக்குவரத்து, நெல் கொள்முதல் செய்வதற்கான வசதி, ஆகியவைகளை எல்லாம் ஆராய்ந்து தக்க ஒரு இடத்தை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1982 மார்ச் 22]

திரு ஆர் நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய நவீன அரிசி ஆலைகளை அரசு ஏற்படுத்துவதோடு, தனியார்களுக்கும் நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்குமே யானால், கிட்டத்தட்ட உமியை மட்டும் நீக்கிய அந்த அரிசியை சாப்பிடுவதற்கு தோதாக இல்லை. அந்த அரிசியை யாரும் சாப்பிட மாட்டார்கள் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டு, உருளை ரப்பர்கள் போட வேண்டிய திட்டத்தை கைவிட வேண்டும் என்று அரிசி ஆலை அதிபர்கள் மனுக்கொடுத்தார்களே அந்த விவரம் என்ன ஆயிற்று என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரப்பர் உருளைகளைத்தான் போட வேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்தி வருகிறது. 2, 3 தடவைகளாக தவணைகளை நீட்டித்துக் கொடுத்துள்ளது. அந்த ரப்பர் உருளைகள் மூலமாக, அரிசி சேதாரம் அதிகமாக ஏற்படாமல் இருக்கிறது என்பதும், அரிசியின் அளவு அதிகமாக வருகிறது என்ற காரணத்தாலும்தான், இரும்பை விட ரப்பர் உருளைகளை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது ஒரு வருட காலத்திற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறது. அதற்குள்ளாக அவைகளையெல்லாம் மாற்ற வேண்டும் என்று சொன்னதன் பேரில் அந்தத் தவணைகளை மத்தியஅரசு புதுப்பித்து தந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்குள் மாற்றிவிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பெறுகிறது.

சென்னை நகரிலுள்ள ஓட்டல்களை தரம் பிரித்து விலைகளை நிர்ணயிக்கும் திட்டம்.

*வினா எண். 587—திரு. சி. கோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள ஓட்டல்களை தரம்பிரித்து அவைகளுக்கு ஏற்ற விலைவாசியினை நிர்ணயிக்க திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டல்களுக்கு விலைவாசிகளை தரம் பிரிப்பதை, எந்த ஓட்டல்களை எந்த அடிப்படையில் பிரிக்க அரசு முடிவு செய்யவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று தமிழ்நாடு உணவு விடுதிகளின் அதிபர்களின் சங்கம் அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்